NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p4
**Date:** 24 December 2020

# கொவிட்-19 தொற்றிலிருந்து பல் மருத்துவர்களையும் நோயாளிகளையும் பாதுகாக்க புதிய தடுப்பு கண்டுபிடிப்பு

பல் மருத்துவர்களையும் நோயாளிகளையும் கிருமி தொற்றுவதில் இருந்து பாதுகாக்க புதிய பிளாஸ்டிக் தடுப்பு ஒன்றை சிங்கப்பூர் ஆய்வாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

‘டென்டல் டார்ட்’ புதிய தடுப்பின் பெயராகும். பல் மருத்துவரிடம் சிகிச்சைக்கு வரும் நோயாளிகளின் முகத்தை சுற்றி சிறிய கூடாரம் போன்று இருக்கும் இந்தத் தடுப்பு வைக்கப்படும்.

இதனால் கிருமி தொற்றுவதிலிருந்து மருத்துவரையும் நோயாளிகளையும் புதிய தடுப்பு பாதுகாக்கும்.

சிங்கப்பூரில் உள்ள பல் மருந்தகங்களில் இந்தத் தடுப்பு விரைவில் பயன்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தினமும் பல நோயாளிகளின் முகத்துக்கு அருகே பல் சிகிச்சை முறைகளை மேற்கொள்வதால் மருத்துவர்களுக்கும் சிகிச்சைக்கு உதவும் ஊழியர்களுக்கும் நோய்த் தொற்றும் திரவத் துளிகள், எச்சில் போன்றவற்றின் மூலம் கிருமி தொற்றக்கூடிய ஆபத்து அதிகமுள்ளது.



நோயாளியின் முகத்தை சுற்றி வைக்கப்படும் இந்த பிளாஸ்டிக் தடுப்பு மருத்துவர்களையும் உதவியாளர்களைம் நோயாளிகளையும் கிருமி தொற்றுவதில் இருந்து பாதுகாக்கும். இதனால் நோயாளிகள் கவலை இல்லாமல் பல் சிகிச்சையை செய்து கொள்ளலாம்.

**படம்: சாவ் பாவ்**

இதனை கவனத்தில் கொண்டு சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் நான்கு ஆய்வாளர்கள் இந்தத் தடுப்பை உருவாக்கியுள்ளனர். நோயாளிகளும் பாதுகாப்பாக இருக்க இது உதவும் என்று நால்வரில் ஒருவரான தேசிய பல்கலைக்கழகத்தின் பல் மருத்துவப் பிரிவின் பேராசிரியர் மன்தீப் சிங் டுகால் தெரிவித்தார்.

கடந்த ஜூன் மாதம் சுகாதாரப் பராமரிப்பு முன்கள ஊழியர்களை கொவிட்-19லிருந்து பாதுகாக்க தேசிய பல்கலைக்கழகமும் தேசிய பல்கலைக்கழக மருத்துவமனையும் இணைந்து உருவாக்கிய தடுப்பை போன்று தற்போதைய தடுப்பும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

“புதிய பிளாஸ்டிக் தடுப்பு கையடக்கமானது, எளிதில் மடக்கக்கூடியது. விலையும் குறைவு, உலகம் முழுவதும் விற்பனை செய்யவிருக்கிறோம்” என்று ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.